**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.199/2022</u>** **தேதி.12.02.2025**

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. மகாலட்சுமி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு 12.02.2025 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | முஹம்மத் கலிமுல்லா ஷரீப் |
| த/பெ. | : | முஹம்மத் கலிலுல்லா ஷரீப் |
| வயது | : | 46/2025 |
| தொழில் | : | வியாபாரம் |
| இனம் | : | ஆண் |
| கிராமம் | : | ஆற்காடு |
| வட்டம் | : | ஆற்காடு |
| மாவட்டம் | : | இராணிப்பேட்டை |

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தை என் தரப்பு சாட்சியாக பாவித்துக்கொள்ளும்படி பிராத்தித்துக்கொள்கிறேன். 20.02.2020 அன்று வாதி பெயரில் ரூ.5,00,000/–க்கு பிரதிவாதி கொடுத்துள்ள இராணிப்பேட்டை கிளை ஆக்சிஸ் வங்கியின் காசோலை எண்.027125 அசல் **வா.த.சா.ஆ.1** ஆகும். 19.05.2020 தேதியிட்டு காசோலை எண்.027125 திருப்பப்பட்ட குறிப்பாணை அசல் **வா.த.சா.ஆ.2** ஆகும். 17.02.2022 தேதியிட்டு வாதியின் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் **வா.த.சா.ஆ.3** ஆகும். மேற்படி அறிவிப்பை பிரதிவாதி 18.02.2022 ம் தேதியில் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதலை அட்டை அசல் **வா.த.சா.ஆ.4** ஆகும். தாவாப்படி தீர்ப்பளிக்கும்படி பிரார்த்தித்துக்கொள்கிறேன்.